
MGS – PAPER 4

**605 / 11**

தொடக்கநிலை 6

மாதிரி தேர்வுத்தாள்



பெயர் : ____________________

வகுப்பு : ____________________

தேதி : ____________________

/ 90




பெற்றோர் கையொப்பம் : ____________________

A1 வேற்றுமை

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும்



More papers at www.testpapersfree.com

**சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. தமிழாசிரியர்கள் தாய்மொழி முகாமின்போது ______________ பலவித பாரம்பரிய விளையாட்டுகளை அறிமுகப்படுத்தினார்கள்.

(1) மாணவர்களால்
(2) மாணவர்களின்
(3) மாணவர்களிடமிருந்து
(4) மாணவர்களுக்கு ( )

Q2. புலவர் விஜய நாட்டு அரசரைப் புகழ்ந்து பாடியதால் ______________ ஆயிரம் பொற்காசுகளை பெற்றார்.

(1) அரசருடன்
(2) அரசரிடமிருந்து
(3) அரசரின்
(4) அரசரால் ( )

Q3. சமூக மன்றத்தில் நடைபெற்ற தீபாவளி விழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு விருந்தினர் விழாவைத் தொடங்கி வைக்க ______________ ஏற்றினார்.

(1) தீபத்தை
(2) தீபத்தால்
(3) தீபத்தில்
(4) தீபத்துக்கு ( )

Q4. திருமதி சுதா ______________ இணைந்து அரங்கேற்றிய 'இன்றைய சிறுவர்கள்' என்னும் நாடகம் பலரால் பாராட்டப்பெற்றது.

(1) சிறுவர்களுக்கு
(2) சிறுவர்களிடம்
(3) சிறுவர்களை
(4) சிறுவர்களுடன் ( )

Q5. கதிருக்கு வயிற்று வலி ஏற்பட்டதால் அவன் தன் ______________ வீட்டின் அருகில் இருக்கும் மருத்துவரைச் காணச் சென்றான்.

(1) அப்பாவிடமிருந்து
(2) அப்பாவுக்கு
(3) அப்பாவோடு
(4) அப்பாவிடம் ( )

**A2 செய்யுள் / பழமொழி**

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு.**



More papers at www.testpapersfree.com

**அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q6. ஒருவர் ________________ இருவர் நட்பு.

(1) நாணயம்
(2) பொறுமை
(3) நம்பிக்கை
(4) பொறை
( )

Q7. தன்னைத்தான் காக்கின் ________________ காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்.

(1) சினங்காக்க
(2) உயிர்க்காக
(3) மனங்காக்க
(4) தனம்காக்க
( )

Q8. பகுத்துண்டு பல்லுயிர் ________________ நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

(1) நீக்குதல்
(2) ஓம்புதல்
(3) காத்தல்
(4) வேண்டுதல்
( )

Q9. உண்டிக்கு அழகு ________________ உண்டல்.

(1) நிறைவோடு
(2) விருந்தோடு
(3) மருந்தொடு
(4) அளவோடு
( )

Q10. ________________ பேசேல்.

(1) ஔவியம்
(2) குறைத்து
(3) கோள்
(4) பொய்
( )

**<u>A3 அடைமொழி / எச்சம்</u>**

**Q11 முதல் Q15 வரையுள்ள <u>அடைமொழி / எச்சத்தை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**



More papers at www.testpapersfree.com

Q11. முத்து கண்ணாடி ஜாடியை ______________ தூக்காததால் அந்த ஜாடி கிழே விழுந்து நொறுங்கியது.

(1) உயரமாக
(2) கவனமாக
(3) கணிவாக
(4) மென்மையாக ( )

Q12. புதிதாக ____________ அடுக்குமாடி கட்டடங்களை வாங்குபவர்களுக்கு அரசாங்கம் சில சலுகைகளை வழங்குகிறது.

(1) தயாரிக்கப்படும்
(2) செய்யப்படும்
(3) கட்டப்படும்
(4) உருவாக்கப்படும் ( )

Q13. பழங்காலத்தில் _________________ கலைப்பொருள்களை எல்லாம் இன்று சிலர் நினைவுப்பொருளாக வைத்திருக்கிறார்கள்.

(1) பயன்படுத்துகிற
(2) பயன்படுத்திய
(3) பயன்படுத்தும்
(4) பயன்படுத்த ( )

Q14. எப்போதும் சாலையைக் கடக்கும்போது இரு பக்கங்களும் _______________ பிறகே கடக்கவேண்டும்.

(1) பார்த்த
(2) பார்க்க
(3) பார்த்தும்
(4) பார்க்கிற ( )

Q15. கோமாளியின் வித்தைகளை _____________ மக்கள் பிரமித்துப்போய்ச் சிலையாய் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

(1) உணர்ந்த
(2) நினைத்த
(3) செய்த
(4) கண்ட ( )

**A 4 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

ஒரு நாள் ஒரு வியாபாரி , ஒற்றைமாட்டு வண்டியில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு சந்தைக்குச் சென்றான். சந்தையில் **Q16** _______________ இருந்ததால் அவனுக்கு நல்ல லாபம் கிடைத்தது. சந்தையில் விற்றது போக



More papers at www.testpapersfree.com

மிஞ்சிய பொருள்களோடு ஊருக்குப் புறப்பட்டான். அப்போது வண்டியை **Q17** ________________ வந்த மாட்டின் காலில் ஆணி குத்திவிட்டது. பாவம்! அந்த மாடு வலியால் **Q18** ________________ ஆரம்பித்தது. மாடு நடக்கத் துன்பப்பட்டது. அதனால், வியாபாரி சற்று நேரம் வண்டியை **Q19** ________________ நிறுத்திவிட்டு ஓய்வெடுத்தான். பின். மீண்டும் தன் பயணத்தை தொடர எழுந்தான். ஊரை **Q20** ________________ சிறிது தூரம்தான் இருந்தது. அதனால், வியாபாரி சரக்குகளையும் பணத்தையும் மூட்டைக் கட்டிக்கொண்டு மாட்டோடு மெதுவாக நடந்தான்.

Q16.
(1) சத்தமாக
(2) அமைதியாக
(3) கூட்டமாக
(4) ஆரவாரமாக ( )

Q17.
(1) சுமந்து
(2) இழுத்து
(3) தள்ளி
(4) தூக்கி ( )

Q18.
(1) ஓட
(2) துள்ள
(3) குதிக்க
(4) நொண்ட ( )

Q19.
(1) நிழலில்
(2) மரத்தில்
(3) ஆற்றில்
(4) வெயிலில் ( )

Q20.
(1) போக
(2) அடைய
(3) சேர
(4) தொட ( )



More papers at www.testpapersfree.com

**<u>B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>**
**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

சீனாவில் உள்ள ஒரு கிராமத்தில், நொம்பேட் என்ற ஒருவன் ஆற்றோரமாகத் தனியாக வாழ்ந்து வந்தான். அவன் தனது தோட்டத்தில் பல கிழங்கு வகைகளையும் சோளச் செடிகளையும் பயிரிட்டுத் தனது **அன்றாட** உணவாக உண்டு வந்தான். எந்நேரமும் அவன் சாப்பிட்டுக்கொண்டே இருந்ததால் **பருமனாக** இருந்தான்.

சாப்பாட்டிற்குப் பஞ்சமின்றி வாழ்ந்ததால் தொழில் செய்யும் எண்ணம் அவன் மனதில் துளிகூட **எழவில்லை**. ஆனால், பண ஆசை அதிகமாகவே இருந்தது. அவனுடைய வீட்டின் பக்கத்திலேயே இருந்த ஆற்றைக் கடக்கும் கிராம மக்கள் ஒரு குறுகிய மாற மேம்பாலத்தைச் சிரமப்பட்டுக் கட்டியிருந்தார்கள்.



More papers at www.testpapersfree.com

அவனோ தினமும் அந்த மேம்பாலத்தில் ஏறி நின்றுகொள்வான். அந்த மேம்பாலத்தைக் கடப்பவர்களை வழிமறித்துப் பணம் கேட்டு மிரட்டுவான். அவன் கேட்ட பணத்தைக் கொடுக்கும்வரை அவர்களைக் கடக்கவிடமாட்டான். வேலை, வியாபாரம், முக்கிய காரியங்கள் போன்றவற்றிற்குச் செல்வது அவசியமானதால், வேறு வழியின்றி அவர்கள் பணத்தைக் கொடுத்து மேம்பாலத்தைக் கடந்தார்கள். அதுவே, அவனது அன்றாட **பிழைப்பானது.**

திடீரென்று ஒரு நாள், இடியும் மின்னலுமாய்க் கனத்த மழை பெய்தது. அன்று முழுவதும் மழை தொடர்ந்து பெய்ததால் வெள்ளம் பெருக்கெடுத்தது. நொம்பெட்டின் வீட்டுத் தோட்டத்தில் இருந்த காய்கறி செடிகள் எல்லாம் **சேதமாகின.** மறுநாள், நொம்பெட்டுக்கு உண்ண உணவு இல்லை. அவனுக்குப் பசியாக இருந்ததால் அவன் மழை மேல் குடியிருந்த மிங்தோவுடைய வீட்டிற்குச் சென்றான். மிங்தோ, நொம்பெட்டுடைய வாடிய முகத்தைப் பார்த்ததும், அவன் வந்த காரணத்தைப் புரிந்துகொண்டான். இருப்பினும், ஐம்பது வெள்ளியை வழங்காமல் அவனுக்கு உதவ முடியாது என்று மிங்தோ கண்டிப்பாக நொம்பெட்டிடம் கூறிவிட்டான். நொம்பெட்டிடம் பணம் இல்லாததால் அவன் மிங்தோவிடம் தன் நிலையை எடுத்துரைத்தான். நொம்பெட் மற்றவர்களுக்கு **இடையூறு** கொடுத்ததால் அவர்களுடைய மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை உணர்த்தவே மிங்தோ அவனுக்கு உதவ மறுத்தான். ஆனாலும், நொம்பெட் பசியுடன் இருப்பதைக் கண்டு மனமிரங்கி உதவினான்.

"எனக்குப் பணம் வேண்டாம்! இனி யாருக்கும் **தொந்தரவாக** இருக்கமாட்டாய் என்று வாக்குறுதி கொடு. அதோடு தினமும் இரவு உணவைச் சாப்பிட வேண்டும்! " என்று மிங்தோ, நொம்பெட்டிடம் அன்போடு கேட்டுக்கொண்டான். அச்செயல் நொம்பெட்டின் மனதை **நெகிழ** வைத்தது. அன்றிலிருந்து அவன் எல்லாரிடமும் மரியாதையுடனும் பணிவுடனும் நடந்துகொண்டான்.

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q21. நொம்பெட்டுக்கு ஏன் தொழிலின் அவசியம் புரியவில்லை?

(1) வேலை ஒன்றும் செய்யாததால்
(2) பருமனாக இருந்ததால்
(3) மர மேம்பாலம் இருந்ததால்
(4) உணவுக்குப் பற்றாக்குறை இல்லாததால் ( )



More papers at www.testpapersfree.com

Q22. கிராம மக்கள் சிரமப்படக் காரணம் என்ன?

(1) குறுகலான மேம்பாலம் கட்டப்பட்டதே
(2) வேலைக்குச் செல்ல முடியாததே
(3) மேம்பாலத்தைக் கடகுக்கும்போது தடுக்கப்பட்டதே
(4) முக்கிய காரியங்களில் ஈடுபட்டதே ( )

Q23. மிங்தோ நொம்பெட்டுக்கு எதை உணர்த்தினான்?

(1) பிறருக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது
(2) மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்
(3) எல்லோருக்கும் மரியாதை செலுத்த வேண்டும்
(4) பணம் வாழ்க்கைக்கு முக்கியம் இல்லை ( )

Q24. நொம்பெட் மிங்த்தோவின் வீட்டுக்குச் சென்று என்ன கேட்டான்?

(1) குடிக்க நீர்
(2) ஐம்பது வெள்ளி
(3) காய்கறிச்ச செடி
(4) உண்ண உணவு ( )

<u>சொற்பொருள்</u>

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25. நெகிழ

(1) இருக்க
(2) திருந்த
(3) வருட
(4) உருக ( )



More papers at www.testpapersfree.com

## C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| Q26. | _______________ கடலில் நீந்தி எடுக்கப்படும் முத்து விலை மதிப்பற்றது. அதை எடுக்க முக்குளிப்பாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். | Q26 (     ) |
| Q27. | நான் சாப்பிட்டுக்கொண்டிருந்த பனிக்கூழ் சட்டையில் கொட்டிவிட்டது. அதன் _____________ அகற்ற தண்ணீரில் அலசினேன். | Q27 (     ) |
| Q28. | | Q28 (     ) |



More papers at www.testpapersfree.com

| | | |
|---|---|---|
| Q29. | கலை நிகழ்ச்சி மிகவும் தாமதமாக முடிந்தது. வீட்டிற்கு வந்து சேர்ந்த நாங்கள் __________ போய் இருந்தோம்.<br><br>அம்மா இன்று மல்லிகைப்பூக்களை வாங்கி வந்தார். அவற்றின் __________ அறை முழுவதும் பரவியது. | Q29 (    ) |

| | |
|---|---|
| (1) மணம் | (5) ஆழ் |
| (2) கரையை | (6) களைத்து |
| (3) ஆழ் | (7) மனம் |
| (4) கலைத்து | (8) கறையை |

**<u>D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>**

பிரியங்கா சேலை மாளிகை
கடையின் முதலாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு
சிறப்பு மலிவு விற்பனை !!!

More papers at www.testpapersfree.com









<u>நிறைவு விழா 9 .8 . 2018</u>

- காஞ்சிபுரச் சேலைகளைத் தவிர மற்ற சேலைகள் அனைத்துக்கும் 20 % கழிவு. பலதரப்பட்ட சேலைகளை வாங்கி இன்புறுங்கள் !!!!
- $300 வெள்ளிக்கும் அதிகமா காஞ்சிபுரப் பட்டுச்செலைகள் வாங்கினால் ஒரு " கைத்தறிச்சேலை " இலவசம்.
- சேலைகள் அல்லாத மற்ற இந்திய பாரம்பரிய உடைகள் அனைத்துக்கும் 30 % கழிவு.
- மொத்தம் $500 - க்கு மேல் செலவு செய்பவர்கள் அதிர்ஷ்டக்குழுக்களில் கலந்துகொள்ளலாம். முதல் பரிசு 'பாம்பே' சென்று வர இலவச விமான டிக்கெட் .
- சிறுவர் ஆடைகளுக்கு 15 % கழிவு கொடுக்கப்படும்.கடைக்கு வரும் முதல் 3 வாடிக்கையாளர்களுக்கு $50 பற்றுச்சீட்டுகள் வழங்கப்படும்.

பொது விடுமுறைகளில் கடை திறந்து இருக்கும். வாருங்கள் வாங்கிச் செல்லுங்கள்!!!

இங்கு பலதரப்பட்ட கைவேலைப்பாடு கொண்ட துணிகளும் புதிதாக டில்லியிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது

**நடைபெறும் இடம்**
சிங்கப்பூர் மால்
121 சிராங்கூன் சாலை
தொலைபேசி எண் : 63883466
இந்த நல்ல வாய்ப்பை நழுவ விடாதீர்கள்!!
சிறப்பு மலிவு விற்பனையில் கலந்துகொண்டு பயன் அடைக

<u>அனைவரும் வருக !! சிறப்புக் கழிவுகளை பெறுக</u>

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாக கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்னை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையை கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. பிரியங்காவின் சேலை மாளிகை எதனைக் கொண்டாடுகிறது?

(1) திறப்பு விழா



More papers at www.testpapersfree.com

(2) காஞ்சிபுரச் சேலை விற்பனை
(3) சிறப்பு சேலை விற்பனை
(4) முதலாண்டு நிறைவு விழா ( )

Q31. அதிர்ஷ்டக குலுக்கலில் கலந்துகொள்ள வாடிக்கையாளர் இதனை நிறைவு செய்யவேண்டும்?

(1) $500 செலவழித்திருக்க வேண்டும்
(2) சிறுவர் ஆடைகளை வாங்கியிருக்க வேண்டும்
(3) கைவேலைப்பாடு கொண்ட துணிகளை வாங்கியிருக்க வேண்டும்
(4) $300 வெள்ளிக்குப் பட்டுப்புடவை வாங்கியிருக்க வேண்டும் ( )

Q32. பற்றுசீட்டைப் பெற என்ன செய்ய வேண்டும்?

(1) விமான டிக்கெட் வாங்க வேண்டும்
(2) கடையின் வாடிக்கையாளராக இருக்க வேண்டும்
(3) முதல் மூன்று வாடிக்கையாளராக இருக்க வேண்டும்
(4) சிறுவர்களுக்கான உடைகளை வாங்க வேண்டும் ( )

Q33. மலிவு விற்பனைக்குச் செல்லும் ஒருவர் என்னென்ன பொருள்களைக் கழிவு தரப்பட்ட விலையில் வாங்கலாம்? ( 4 மதிப்பெண்கள் )

_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
________________

**D8 சுயவிடை கருத்தறிதல்**
**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.**

முன்னொரு காலத்தில் அரசர் ஒருவர் வீரர்களுடன் வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குச் சென்றார். வழியில் ஒரு மரத்திலிருந்த **காகம்** இறக்கைகளை அடித்துக் கொண்டு ஏதோ **கரைந்தது.** உடனே அரசர் **சகுனம்** பார்ப்பதிலும் பறவைகளின் மொழி அறிவதிலும் தேர்ச்சி பெற்ற வீரன் ஒருவனை அழைத்து, " அந்தக் காகம் என்ன சொல்கிறது?" என்று கேட்டார்.



More papers at www.testpapersfree.com

அதற்கு அந்த வீரன், "அரசே ! காகம் நம்மைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் புல் வெட்டுவதற்காக இங்கு வரும் **உழவன்** ஒருவன், பாம்பு **தீண்டி** இறந்து விடுவான், என்று சொன்னது," என்றான். அவன் சொல்லி வாய் மூடவில்லை. கையில் புல் அறுக்கும் அரிவாளுடன் ஒருவன் அவ்வழியே சென்றான்.அவனைக் கண்ட அரசர் பறவை சொன்னபடி நடக்கிறதா என்பதை அறிய ஆவல் கொண்டார். அதனால், அவர் தன் வீரர்களுடன் அங்கேயே தங்கியிருந்தார்.

மாலை நேரமாயிற்று. தொலைவில், தலையில் புல் கட்டுடன் மெதுவாகத் திரும்பி வந்துகொண்டிருந்தான் உழவன். உடனே, அரசர் சகுனம் சொன்ன வீரனைப் பார்த்து, " நீ சொன்னது என்னவாயிற்று ? இவனை பாம்பு கடிக்க மறந்து விட்டதா? இல்லை , இவன் தான் **எமனை** ஏமாற்றிவிட்டானா? இவன் எப்படி சாவிலிருந்து தப்பித்தான் என்பதை நீ எனக்கு விளக்க வேண்டும்," என்று கோபத்துடன் கூறினார்.

"அரசே! அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம். அந்தக் காகம் சொன்னபடிதான் நடந்திருக்கவேண்டும். இடையில் என்ன **நிகழ்ந்தது** என்று புரியவில்லை," என்று பதிலளித்தான். தலையில் புல் கட்டுடன் இருந்த உழவன் அவர்கள் அருகில் வந்தான். புல் கட்டில் **அரிவாள் சொருகப்பட்டு** இருந்தது. காகம் சொன்னதை உழவனிடம் கூறிய வீரன், புல் கட்டைக் கிழே போடும்படி கேட்டுக்கொண்டான். உழவன் அப்படியே செய்தான். புல் கட்டு கிழே விழுந்தவுடன் அதைக் கட்டியிருந்த கயிறு அறுந்துவிட்டது. உள்ளெ அரிவாளால் வெட்டப்பட்ட பாம்பு இருந்து கிடந்தது. எல்லாரும் வியப்பாக பார்த்தனர்.

"அரசே! பாம்பு இவனைக் கொல்வதற்காக வந்திருக்கிறது. ஆனால், அது இறந்துவிட்டது. எனக்குக் காரணம் தெரியவில்லை. எதற்கும் அந்த உழவனிடம் கேட்கிறேன்," என்றான் வீரன். பிறகு உழவனைப் பார்த்து , " நீ புல் வெட்டச் சென்றபோது ஏதேனும் **குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி** நடந்ததா?" என்று கேட்டான். அதற்கு உழவன், "வழியில் ஒரு **முதியவர்** வந்தார். அவரை நான் வணங்கினேன். அவர், ' நீடூடி வாழ்க!' என்று என்னை **வாழ்த்தினார்.** அதுதான் நடந்தது. வேறொன்றுமில்லை," என்று சொல்லிவிட்டு தன் வழியே சென்றான்.

அதைக் கேட்ட வீரன், " அரசே! இப்பொழுது உண்மை தெரிந்துவிட்டது. அந்த முதியவரின் வாழ்த்தினால் தான் அவன் இன்று **மரணத்திலிருந்து** தப்பித்துக்கொண்டான். உயர்ந்த சான்றோர்களின் சொற்கள் ஒருவனின் தலை எழுத்தைக்கூட மாற்றும்," என்று கூறி **விளக்கம்** தந்தான்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. ( 22 மதிப்பெண்கள் )**

Q34. வீரன் எவற்றில் திறமை வாய்ந்தவன்? ( 3 மதிப்பெண்கள் )

________________________________________

________________________________________

________________________________________

________________________________________



More papers at www.testpapersfree.com

Q35. காகம் என்ன சொன்னதாக வீரன் கூறினான்? ( 3 மதிப்பெண்கள் )

Q36. அரசருக்கு ஏன் கோபம் வந்தது? ( 2 மதிப்பெண்கள் )

Q37. உழவன் உயிர் தப்பியதற்குக் காரணம் என்ன? ( 4 மதிப்பெண்கள் )

Q38. உழவன் புல் வெட்டச் சென்றபோது என்ன நிகழ்ந்தது? ( 3 மதிப்பெண்கள் )



More papers at www.testpapersfree.com

Q39. **"அரசே இப்பொழுது உண்மை தெரிந்து விட்டது"** என்ற சொற்றொடரில் <u>உண்மை</u> என்ற சொல் எதைக் குறிக்கிறது? ( 3 மதிப்பெண்கள் )

Q40. அரசரைக் காட்டிலும் வீரன் பொறுமை இழக்காமல் நடந்துகொண்ட ஓர் செயலைப் பற்றி விளக்கி உன் தோழனுக்கு ஒரு குறிப்பு எழுது.
( 4 மதிப்பெண்கள் )

அன்புள்ள பாலாவுக்கு,

இப்படிக்கு,
உன் அன்பு நண்பன் விஷ்ணு.





More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# MGS PAPER 4

## தொடக்க நிலை 6

கே1) 4
கே2) 2
கே3) 1
கே4) 4
கே5) 3
கே6) 4
கே7) 1
கே8) 2
கே9) 2
கே10) 1
கே11) 2
கே12) 3
கே13) 2
கே14) 1
கே15) 4
கே16) 3
கே17) 2
கே18) 4
கே19) 1
கே20) 2
கே21) 4
கே22) 3
கே23) 1
கே24) 4
கே25) 4
கே26) 5
கே27) 8
கே28) 6
கே29) 1
கே30) 4
கே31) 1
கே32) 3

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

33) காஞ்சிபுரச் சேலையை தவிர்த்து மற்ற சேலை-
-களுக்கு 20% கழிவும், சேலைகள் அல்லாத
மற்ற இந்திய பாரம்பரிய உடைகளுக்கு 30%
கழிவும் மற்றும் சிறுவர் ஆடைகளுக்கு 15%
கழிவும் இவையே மலிவு விற்பனைக்குச் செல்லும்
ஒருவர் வாங்கும் பொருளின் கழிவுகள் ஆகும்.

34) வீரன் சகுனம் பார்ப்பதிலும் பறவைகளின் மொழி
அறிவதிலும் திறமை வாய்ந்தவன்

35) சிறிது நேரம் கழித்து புல் வெட்ட வரும் உழவன்
ஒருவன் பாம்பு தீண்டி இறப்பான் என காகம்
கூறியதாக வீரன் கூறினான்.

36) சகுனம் பார்த்து இறப்பான் எனக் கூறிய உழவன், உயிருடன் மாலை நேரம்
புல் கட்டுடன், திரும்பி வந்ததை பார்த்ததால்
அரசனுக்கு கோபம் வந்தது.

37) புல் வெட்ட சென்ற உழவன் வழியில் கண்ட பெரியவரை
வணங்கி நீடுடி வாழ ஆசி பெற்றான் அதன் காரணமாக
தன்னை தீண்ட வந்த பாம்பை தவறுதலாக தானே
வெட்டி கொன்றான். இதுவே உழவன் உயிர் தப்பியதற்கு
காரணம் ஆகும்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

38) உழவன் புல் வெட்ட சென்ற போது வழியில் ஒரு முதியவரை கண்டு வணங்கினான். அவரும் அவனை நீண்ட நாள் வாழ வாழ்த்தினார் இதுவே நிகழ்ந்தது.

39) "உயர்ந்த சான்றோர்களின் சொற்கள் ஒருவரின் தலை எழுத்தைக்கூட மாற்றும்" என்பதை "அரசே இப்பொழுது உண்மை தெரிந்து விட்டது" என்ற சொற்றொடரின் உண்மை என்ற சொல் குறிக்கிறது.

40) இறப்பான் என நினைத்த உழவன் உயிர்தப்பியதை கண்டு அதற்கான காரணத்தை அறிய பொறுமையுடன் செயல்பட்டான். உழவிடன் நடந்த நிகழ்வுகளை கேட்டும், அவன் புல்கட்டில் இறந்து கிடந்த பாம்பை கண்டும் உண்மையை உணர்ந்தான். அதை அரசரிடம் தெரிவித்தான்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com